DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.343/2025

Deposition of Witness : LW7/PW6

| | | | |
|---|---|---|---|
| Name | புஷ்பராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | கந்தையன் | Village | |
| Age | 51 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.01.2026.** | | | |

( Accused absent. U/s.317 PFA)

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, கடந்த 03.06.2024 அன்று, 19.00 மணியளவில் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சங்கர், த.பெ.மாயவன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.314/2024 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(i) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் மனுவையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் எழில்தாசன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்து, கடந்த 10.08.2024 அன்று வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ-1 புகார் மனுவில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ-1ல் இடப்பட்டுள்ள புகார்தாரரின் கையொப்பமானது Overwritting செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ-1ல் இடப்பட்டுள்ள புகார்தாரரின் கையொப்பமானது Overwritting செய்யப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக தகவல் கிடைத்தது இரவு 7.00 மணி என்றாலும், ஆனால் FIR ன் 3 வது காலத்தில் குற்ற நிகழ்வு நேரம் 06.20 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். அ.சா-1 காலை 06.20 மணிக்கு பண்ருட்டி மருத்துவமனைக்கு சென்றுள்ள நிலையில், மேற்படி மருத்துவமனையிலிருந்து எனக்க தகவல் ஏதேனும் கிடைத்ததா என்றால் கிடைத்தது.

மருத்துவமனையிலிருந்து, நிலையத்திற்கு தகவல் கிடைக்கும் பட்சத்தில், நாங்கள் தான் மருத்துவமனை சென்று, பாதிக்கப்பட்ட நபரிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக, அவ்வாறு நான் எதுவும் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான், பணிசுமையின் காரணமாக அவ்வாறு வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து 13 நாட்கள் கழித்து 19.06.2024 அன்று தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்பதற்கான காரணம் என்னவென்றால், நீதிமன்ற காவலரிடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படட உடனேயே கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், அவர் அதனை எப்போது நீதிமன்றத்தில் சேர்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் வழக்கு சம்பவம் தொடர்பாக காணொளி ஏதேனும் என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக, எனக்கு 07.00 மணிக்கு தான் மருத்துவமனையிலிருந்தே தகவல் கிடைத்துள்ள நிலையில், நான் எவ்வாறு அதே 7.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க முடியும் என்றால், மருத்துவமனையிலிருந்து எனக்கு காலை 7.00 மணிக்கு முன்னதாகவே தகவல் கிடைத்துவிட்டது, ஆனால் என்னால் பணிசுமையின் காரணமாக மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெறஇயலவில்லை. ஆனால், அன்று மாலை 19.00 மணியளவில் நிலையம் வந்து, புகார்தாரர் புகார் அளித்ததன்பேரில், அதனைத்தொடர்ந்து முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது. மேற்படி புகாரினை அளிக்கும்போது, புகார்தாரருடன் யாரெல்லாம் நிலையம் வந்தார்கள் என்றால் அவர் மட்டும் தான் வந்தார். இவ்வழக்கின் புகார்தாரர் பண்ருட்டி கார் சங்க தலைவர் என்பதனாலும், அவரிடம் அடிக்கடி கார் வாடகைக்கு எடுப்பதன் மூலம் ஏற்பட்ட பழக்கத்தினாலும், அவர் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் இல்லா எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை இல்லை.**